சிறுவர்கள் முதல்
பெரியோர் வரை
நாட வேண்டிய
★ ஒரே ஸ்தாபனம் ★
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

இன்றைய நாகரீகத்தின்
நவீன முன்னோடிகள்
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 11 வியாழக்கிழமை (24 – 03 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 117

## இனவாதத்தைக் கக்கும்
# டி.பியின் போக்கு
# முட்டாள்தனமானது
## 'சண்டே ஐலண்ட்' சாடுகிறது

கொழும்பு, மார்ச் 24

இனவாத அடிப்படையில் ஜனாதிபதி விஜேதுங்க மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் முட்டாள்தனமானவை.

"சண்டே ஐலண்ட்" ஆங்கில வார இதழில் இவ்வாறு விமர்சிக்கப்பட்டிருக்கிறது.

அதன் விசேட செய்தியாளர் ஒருவர் எழுதிய கண்ணோட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"சிறுபான்மை இனத்தவரின் ஆதரவைப் பெறுவதில் உள்ள முக்கியத்துவம் பற்றி ஜனாதிபதி விஜேதுங்கா பூரணமாக புரிந்து கொள்ளவில்லை. பெரும்பான்மை இனத்தவரின் நலன்களை மட்டுமே பேணுவதில் உள்ள முட்டாள் தனத்தை அவர் உணர்ந்து கொள்ளவேண்டும்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தென்மாகாணத்தில்
# இன்று வாக்களிப்பு
## நாளை அதிகாலை முடிவு தெரியும்

கொழும்பு, மார்ச் 24

ஸ்ரீலங்காவின் முக்கிய தேர்தல்களில் ஒன்றாகக் கருதப்படும் — சர்ச்சைக்குரிய — தென்மாகாண சபைக்கான தேர்தலின் வாக்களிப்பு இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை இடம் பெறவிருக்கிறது.

இன்றிரவு 8 மணிக்கு தென் மாகாணத்தின் மூன்று மாவட்ட செயலகங்களிலும் வாக்குகளை எண்ணும் பணி ஆரம்பிக்கும். அனேகமாக நாளை அதிகாலை 2 மணியளவில் முடிவுகள் வெளியாகும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

53 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இத் தேர்தலில் 14 லட்சத்து 39 ஆயிரத்து 187 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். ஆயிரத்து 255 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

[உ-எ-6-162]

## எதிரணிக்கே வெற்றி வாய்ப்பு!

கொழும்பு, மார்ச் 24

கொழும்புக்குக் கிடைத்துள்ள அறிக்கைகளின் படி, தென் மாகாணசபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியே வெற்றியீட்டும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருப்பதாக பி. பி. ஸி அறிவித்தது.

இத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடையும் என்று இரகசியப் பொலிஸும் தேசிய உளவுச் சபையும் அரசாங்கத்துக்கு அறிவித்து உள்ளன.

எவ்வகையிலேனும் தென் மாகாண சபையைக் கைப்பற்றுவது என்று அரசு தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

அண்மையில் அரசாங்கத்தால் பதவி உயர்வு வழங்கப்பட்ட சுமார் எண்ணாயிரம் பொலிஸார் தென் மாகாணத்தில் தேர்தல் பணிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இப் பொலிஸார் இது வரை செயற்பட்ட விதத்தைப் பார்க்கையில் நியாயமான, பக்கச்சார்பற்ற பணியை இவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது என்று எதிரணியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## டி.பி., சந்திரிகா எதிர்காலம் இன்று நிர்ணயிக்கப்படுகிறது

கொழும்பு, மார்ச் 24

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக விஜேதுங்க இருப்பாரா என்பதையும் —

சந்திரிகா குமாரணதுங்காவின் அரசியல் எதிர்காலத்தையும் —

இன்றைய தேர்தல் நிர்ணயிக்கும் என அரசியல் அவதானிகள் கருதுவதாக வெரித்தாஸ் சிங்கள சேவையில் அறிவிக்கப்பட்டது.

தேர்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நடத்தப்பட்ட பிரசாரக் கூட்டங்களுக்கு அதிக எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொள்ளாதது ஜனாதிபதி விஜேதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் கவலையை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமது கொழும்புச் செய்தியாளர் ஹேமாஸ் வர்ணகுலவை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் சிங்கள சேவை நேற்று இதனை அறிவித்தது.

மக்கள் ஐ.தே.க. கூட்டங்களுக்கு திரண்டு வராததால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மக்கள் கூடும் இடங்களுக்கு தாமே நேரில் சென்று அவர்களுடன் அளவளாவுவதில் ஈடுபட்டிருந்தார்.

ஒரு முறை கொக்கல பகுதிக்கு சென்ற பிரதமர், அங்கு கடலில் குளித்துக் கொண்டிருந்த சிலரைக் கண்டதும் அவர்களுடன் சேர்ந்து கடலில் குளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-6)

## வீதியில் வாக்குச்சீட்டுகள்!

கொழும்பு, மார்ச் 24

தென் மாகாணம் வீரக்கெட்டிய ஐந்து சந்தியில் — பெயரிடப்படாத — இரண்டு கடித உறைகளுக்குள் வைக்கப்பட்ட நிலையில் விழுந்து கிடந்த 127 உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும்படி அம்பாந்தோட்டை அரச அதிபருக்கு பிரதித் தேர்தல் ஆணையாளர் ஏ.பி.டி. சில்வா உத்தரவிட்டுள்ளார்.

அரச அதிபரின் உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்ட இவ்வாக்குச் சீட்டுகள் கள்ள வாக்குப்போடுவதற்காகப் பயன்படுத்தப்படக்கூடும் என்று சுதந்திரக் கட்சி எம்.பியான நந்திமித்திர ஏக்கநாயக்கா வீரக்கெட்டிய பொலிஸில் முறையிட்டார்.

வாக்குச்சீட்டுகள் வீதியில் கிடக்கக் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் உண்மையானது என்று பிரதி தேர்தல் ஆணையாளர் வெரித்தாஸ் வானொலிக்குத் தெரிவித்தார்.

(உ-எ-6)

## செய்திச் சாரம்

### தபால்கள் திங்களன்றே விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

வாதுவ கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால்கள் திங்களன்றே தரம்பிரித்து விநியோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தபால் பொதிகள் நாளை வெள்ளிக்கிழமை யாழ். பிரதம தபாலகத்துக்கு எடுத்து வரப்படும்.

சனி, ஞாயிறு விடுமுறை தினங்களாக இருப்பதால் திங்களன்றே தரம்பிரித்து விநியோகிக்கும் வேலைகள் நடைபெறும். (இ–162)

### 4, 620 பரல் மண்எண்ணெய் இன்று வந்து சேரும்

யாழ்ப்பாணம், மார்ச் 24

கொழும்பில் இருந்து ஒரு தொகுதி தேங்காய் எண்ணெய், மண்எண்ணெய் பரல்களுடன் 'மாஹோ' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்ட இக்கப்பலில் 4 ஆயிரத்து 620 பரல் மண்எண்ணெயும் ஒரு தொகுதி தேங்காய் எண்ணெயும் எடுத்துவரப் படுவதாக செயலக திட்டப் பணிப்பாளர் திரு. எஸ். பதமநாதன் தெரிவித்தார். (உ-3)

### 5,000 சைக்கிள்கள் கப்பலில் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 24

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ள 'வாதுவ' கப்பலில் 5 ஆயிரம் சைக்கிள்கள் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் உள்ள சில அரசுத் திணைக்களங்களின் ஊழியர்களுக்கும் மற்றும் ப.நோ.கூ. சங்கங்களுக்குமே இச் சைக்கிள்கள் வந்து சேர்ந்துள்ளன. (உ-3)

### நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 24

கொழும்பு செல்லும் அவசர நோயாளர்களின் பயணத்துக்காக எதிர்வரும் 29 ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 'நரோமா' கப்பல் சேவை நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### அனுமதி வழங்கும் செயலகங்கள் மூடப்பட்டிருக்கும்

அனைத்து அனுமதி வழங்கும் செயலகங்களும் இன்று மூடப்பட்டிருக்கும் என போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (இ 3)

### முச்சந்தி முரளி



### மட்டக்களப்பில் 355 வீடுகளில் படையினர் முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மொத்தமாக 486 வீடுகளில் படையினர் தமது முகாம்களை அமைத்துள்ளனர்.

இவற்றில் 355 வீடுகளில் இராணுவத்தினரும், 110 வீடுகளில் பொலிஸாரும், 21 வீடுகளில் விஷேட அதிரடிப்படையினரும் தங்கியுள்ளனர்.

அந்த வீடுகளின் உரிமையாளர்களான தமிழர்கள் அகதி முகாம்களில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### அகதிகள் தூதரக பிரதிநிதி வருகை

யாழ்ப்பாணம், மார்ச் 24

இந்தியாவில் இருந்து திரும்பிய 125 ஈழத்தமிழ் அகதிகளுடன் நாளை திருமலையில் இருந்து வடக்கே வரவுள்ள 'நரோமா' கப்பலில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக திருமலை பிரதிநிதி திரு றொட் ஸிலிப்பும் இங்கு வரவுள்ளார். (உ-5)

### ஹெலித்தாக்கு!

அச்சுவேலி, மார்ச் 24

அச்சுவேலி நவக்கிரி குட்டியப்புலம் பகுதிகளில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஹெலித்தாக்குதல் இடம்பெற்றது.

வீதியில் சென்ற வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் குடியிருப்புகளை நோக்கியே ஹெலி சுற்றிச் சுற்றி வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்தது. (உ-11-155)

### விமான விபத்தில் 75 பேர் உயிரிழப்பு

மொஸ்கோ, மார்ச். 24

மொஸ்கோ— ஹொங்கொங் இடையே சேவையில் ஈடுபட்டிருந்த 'ஏரோபுளொட்'' விமானம் சைபீரியாவில் நேற்றுக்காலை விழுந்து நொறுங்கியதில் அதில்பயணம் செய்த 75 பேரும் உயிரிழந்தனர். (உ-162)

### அகதிகளின் படகுகளை பெற முயற்சி

அகதிகளாகசென்றஇலங்கை தமிழ் மீனவர்கள் தங்களுடன் இந்தியாவுக்கு எடுத்துச்சென்ற படகுகளை அங்கிருந்து மீண்டும் இலங்கைக்கு எடுத்து வருவது குறித்துஇலங்கை,இந்திய அரசுடன் பேச்சு நடத்திவருகிறது.

தற்சமயம் தமிழகக் கடற்கரையில் கட்டப்பட்டுள்ள அப்படகுகள் விரைவில் இலங்கைக்கு எடுத்து வரப்படும் என்று ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

மன்னாருக்கு தமிழகத்தில் இருந்து திரும்பிய அகதிகளின் 114 படகுகள் தென்னிந்தியக் கடற்பகுதியில் தற்போது நங்கூரமிடப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளன. (உ-3)

### கிழக்கில் தேடுதல்

கொழும்பு, மார்ச் 24

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி தேர்தல்கள் முடிந்த பின்னர் சுற்றிவளைப்பு தேடுதல்களை விசேட அதிரடிப் படை மீண்டும் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை திருக்கோவில், ஆலையடி வேம்பு பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய படையினர்,சில இளைஞர்களை முகாமுக்கு அழைத்துச் சென்று பின்னர் விடுதலை செய்தனர். [உ-3)

### படையினர் சூடு!

யாழ்ப்பாணம், மார்ச் 24

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை 12. 30 மணிக்கு யாழ். கரையோரப் பகுதியை நோக்கி தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

## விமானத்தில் பணநோட்டுகள் எடுத்து வருவதற்கு முயற்சி!

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ் வங்கிகளில் ஏற்பட்டுள்ள பண நோட்டுகளுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய கொழும்பில் இருந்து விமான மூலம் பணம் எடுத்து வர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டு நெருங்கும் இக் காலத்தில் வங்கிகளில் பணத்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் —

'நரோமா' கப்பல் மற்றும் பொருள்கள் ஏற்றிவரும் கப்பல்கள் ஆகியவற்றில் பணம் எடுத்து வருவதற்கு படையினர் அனுமதி மறுத்துள்ளதால். விமான மூலம் பணத்தை எடுத்துவர யாழ். அரச அதிபர் மூலமாக முயற்சி மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் —

இலங்கை வங்கி வடபிரதேச முகாமையாளர் திரு. எஸ். கணேசமூர்த்தி தெரிவித்தார்.

பண நோட்டுக்கள் விமான மூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்டு, அங்கிருந்து காங்கேசன்துறை ஊடாக கப்பலில் பருத்தித்துறைக்கு கொண்டு வர முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (உ-3)

## இனி 'நரோமாவில்' மட்டுமே பயணிகள் செல்ல முடியும்

'நரோமா' கப்பல் தவிர்ந்த ஏனைய கப்பல்களில் பயணிகள் செல்வதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு தடைவிதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து வடக்கு நோக்கி வரும் மற்றைய கப்பல்களில் ஒன்றிரண்டு அரச அதிகாரிகள் பயணம் செய்வதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு முன்னர் அனுமதி வழங்கி வந்தது.

கப்பல் நிறுவனங்களின் கோரிக்கையையடுத்து சரக்குக் கப்பல்களில் அரச அதிகாரிகள் கூட பயணம் செய்வதை பாதுகாப்பு இணைப்புக்குழு தடைசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## 'நரோமா' சேவையில் மாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச். 24

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் இன்று நடைபெறவிருந்த 'நரோமா' கப்பல் சேவை நடைபெறமாட்டாது என்று யாழ் செயலகத்துக்கு கொழும்பில் இருந்து நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'நரோமா' கப்பலில் திருகோணமலைக்கு இன்று செல்வதற்காக செயலகத்தில்பெயர் பதிவு செய்தவர்கள் இன்று பருத்தித்துறைக்கு செல்ல வேண்டாம் என்றும்—

எதிர்வரும் 9 ஆம் திகதி பகல் 12 மணிக்கு இவர்களை பருத்தித்துறை துறைமுகத்தில் சமூகம் அளிக்குமாறும் யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி. ப. திலகநாயகம் போல் கேட்டுள்ளார்.

அதேவேளை— எதிர்வரும் 26 ஆம் திகதி 'நரோமா' கப்பலில் செல்ல செயலகத்தில் பெயர் பதிந்தவர்களுக்கு அன்று செல்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது என செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்' (உ-3)

## முல்லைத்தீவில் வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

முல்லைத்தீவு மாவட்டம் கோட்டைக்கேணிப் பகுதியில் நேற்றுக் காலை படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

அந்தமோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான இரண்டாம் லெப்டினன்ட் குமரன் (இராஜேந்திரன் ஸ்ரீதரன் — மந்துவில், கொடிகாமம்) என்பவர் வீரச்சாவடைந்தார்.

முல்லைத்தீவு மாவட்டம் நெடுங்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் துணைப்படை வீரர்களான லெப்டினன்ட் இ. சுப்பிரமணியம் (நெடுங்கேணி வட்ட துணைப்படைப் பொறுப்பாளர் — மருதோடை), இரண்டாம் லெப்டினன்ட் ஆ. செல்வராஜா (மருதோடை) ஆகியோர் வீரச்சாவடைந்தனர். (உ-5)

## குடாநாட்டில் 2 மாதங்களில்
## 13 ஆயிரம் பேருக்கு மலேரியா பாதிப்பு!

யாழ். குடாநாட்டில் இவ்வருடம் ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களிலும் 12 ஆயிரத்து 857 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர் இவர்களில் 730 பேர் மூளைமலேரியாவிற்கு இலக்காகினர்.

ஜனவரி மாதத்தில் மட்டும் 8 ஆயிரத்து 820 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 361 பேர் மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர்.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பகுதியிலேயே கூடுதலானோர் மலேரியாவுக்கு இலக்காகினர். மேற்குறிப்பிட்ட இரண்டு மாதங்களிலும் இங்கு 4 ஆயிரத்து 659 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களில் 199 பேர் மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர். (உ-162)

## யாழ். மக்களின் தைரியத்தை அரசால் முறிக்க முடியாது!
### லண்டன் ஹரோ நகர மேயர் பேட்டி

லண்டன், மார்ச் 24

யாழ் மக்கள் மிகவும் தைரியத்துடன் இருக்கின்றார்கள். அவர்களின் தைரியத்தை முறிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசுக்கு சக்தி இருக்கும் என நான் நம்பவில்லை.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய லண்டன் ஹரோ நகர மேயர் திரு சின்னமணி பிரபு.வி தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானத்துக்குத் தாம் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் என்னிடம் தெரிவித்தனர். அவர்கள் கூறிய வார்த்தைகளை அறிக்கையாக்கி நான் அரசின் பொறுப்பாளர்களிடம் கொடுத்துள்ளேன்.

படைத் தலைவர்களையும் சில அமைச்சர்களையும் அங்கு சந்தித்துப் பேசினேன்.

நான் என்னுடன் இரு ஆராய்ச்சியாளர்களை இலங்கைக்கு அழைத்துச் சென்

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்

## சப்பர வெள்ளோட்ட விழா 24-03-1994 வியாழக்கிழமை

# பழந் தமிழர் வரலாற்றை எடுத்துக்கூறும்

# யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம்

மக்கள் வையத்துள் வாழ் வாங்கு வாழ வகை செய்வது நமது சமயங்கள். சமய வாழ்வை இலட்சியத்துடன் பின்பற்றினால் அவன் வாழ்க்கை தெய்வீகமாகிறது. மனிதன் ஆன்மீக வழியில் நின்று இறைவனை வழிபாடாற்றிடவே ஆலயங்கள் தோன்றின. ஆலயங்கள் வழிபாட்டுத் திருத்தலங்களாக மட்டுமன்றி தமிழ் மக்களின் கலை கலாசாரங்களை பிரதிபலிக்கும் கலைக்களஞ்சியங்களாகவும் விளங்குதல் அவசியம்.

நம் தமிழ் ஈழத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப்பெற்று, கலையின் பெருமையை உணர்த்தி நிற்கும் ஆலயம் வண்ணை சிவன் கோயில். இங்கே மூல மூர்த்தியாக அமர்ந்து திருவருள் செய்பவர் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான். இக்கோயில் தீர்த்தம் சித்தாமிர்த புஷ்கரணி.

இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன்னர் சாதாரண ஆண்டு சித்திரை மாத பூர்வ பக்ஷ சப்தமி திதியோடு கூடிய புனர்பூச நட்சத்திரத்தில் இவ்வாலய கும்பாபிஷேகம் முதன் முறையாக நடைபெற்றதென வரலாறுகள் சான்று பகருகின்றன. அன்று முதல் இன்று வரை திரு. வைத்திலிங்கச் செட்டியார் வம்சத்தாரால் இவ்வாலயம் சிறப்புற நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

ஆண்டு தோறும் பங்குனி உத்தர தினத்தை தீர்த்த



நாளாகக் கொண்டு முதல் பதினெட்டு தினங்கள் மகோற்சவம் நடைபெறுகின்றது.

இவ்வருடம் நடைபெற்று வருகின்ற மகோற்சவத்தில் புதிதாக திருநெல்வேலி கலைவாணி கலையகம் சித்திர சிற்ப வர்ண கலாஜோதி திரு. இரத்தினம் கனகராசா அவர்களால் 32 அடி உயரத்தில் அமைக்கப்பட்ட புதிய சப்பரத்தில் இறைவன் ஆரோகணிக்க உள்ளான்.

ஆலயக் கோபுரத்திலிருந்தே எழுந்தருளும் தன்மையை உணர்த்தும் சப்பர உற்சவம் பெருமையுடையது. நாவலர் பெருமான் தமது சமய பண்பாட்டை, நெறியை முதன் முதலில் பிரசங்கம் மூலம் உணர்த்திய ஆலயம் இதுவே யாகும். நாவலர் வழியில் சமயப் பிரசாரங்கள், பண்ணிசைகள் போன்றவை இன்றும் இவ்வாலயத்தில் நடைபெற்று வருவதைக் காணலாம்.

நமது வருங்கால சமுதாயத்தினருக்கு பழந்தமிழ் வரலாற்றை எடுத்துக் கூறும் இவ்வாலயத்தை பேணிப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு தமிழ்மகனதும் கடமையாகும்.

வேதாகமங்களில் கூறப்பட்ட கிரியை முறைகளுக்கு அமைவாக தினமும் பூசைகள் நடைபெற்று வருகின்றன. தமிழ் மக்களின் சமயப் பாரம்பரியத்து ஏற்புடையதாக சமயப் பிரசங்கங்களும், நிகழ்ச்சிகளும் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

ஈழத்தின் பிரபல கலைஞர்களின் மரபு வழியிலான இசை ஆராதனையும் நிகழ்வுகளில் இடம்பெற்று பக்தர்களை சிலிர்க்க வைக்கிறது.

முப்புர மெரித்த சிற்பரனை சப்பரத்தில் வழிபட்டு சேவிப்போம். வையகம் துயர்தீர வண்ணை வைத்தீஸ்வரனை வழிபடுவோமாக!

''லோகா சமஸ்தா சுகினோ பவந்து''

✶

பிரதிஷ்டா சிரோன்மணி சிவஸ்ரீ
சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள்
வண்ணை சிவன் தேவஸ்தானம்


சைவப் பெருமக்கள் அனைவரையும்

வண்ணை வைத்தீஸ்வரப் பெருமானின் திருவருளை முன்னிட்டு 24 - 03 - 1994 காலை 10-00 மணிக்கு நிகழவிருக்கின்ற சப்பர வெள்ளோட்ட விழாவில் கலந்து கொண்டு வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**சிவலிங்கம் மோட்டோர்ஸ்**
25, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

**சுப்பிரமணிய புத்தகசாலை**
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**தாமோதர விலாஸ்**
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**உமா ஸ்ரோர்ஸ்**
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானுக்கு
புதிய சப்பரம் அமைவதையிட்டு
**எமது நல் வாழ்த்துக்கள்!**

மனங்கவரும்
அழகு மிகு அச்சக வேலைகளுக்கு
**ஸ்ரீ காந்தா அச்சகம்**
(ராஜா தியேட்டர் அருகில்)
அச்சக வீதி, யாழ்ப்பாணம்.



## வெள்ளோட்ட விழா
## காண வருக... வருக

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத
வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்
**வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்**
**சப்பர வெள்ளோட்ட விழா**

காலம்: **24-03-1994** வியாழக்கிழமை
காலை 10மணி

சைவப் பெருமக்களே!

எல்லாம் வல்ல வண்ணை வைத்தீஸ்வரப் பெருமான் திருவருளை முன்னிட்டு திருநெல்வேலி கலைவாணி கலையகம் சித்திர சிற்ப வர்ண கலாஜோதி திரு. இரத்தினம் கனகராஜா ஆச்சாரியாரால் சிவனுக்குரிய பூசாந்திர உருவ அமைப்பில் 32 அடி உயரத்தில், யாழ்ப்பாணத்தில் முதலாவது சப்பரத்தில் மிக உயர்ந்த வடிவில் உருவாக்கப்பட்ட புதிய சப்பர வெள்ளோட்ட விழா 24-03-1994 வியாழக்கிழமை 10மணிக்கு நடைபெறவுள்ளது.

அடியார்கள் அனைவரையும் வெள்ளோட்ட விழாவிலும் அன்றைய இரவு சப்பர உற்சவத்திலும் கலந்து இறையருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆசியுரை: சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்
இணுவில், தருமசாஸ்தா குருகுலம்.

வை. கந்தப்பச் செட்டியார்,
தர்மகர்த்தா.
வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்

(விளம்பர இல: 7609)


## சின்னஞ்சிறு விளம்பரம்


**விற்பனைக்கு**

பூச்சி நீக்கப்பட்ட 1½ மாதம் நிரம்பிய அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 81/1, (257), கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (30042)

**கோழிக்குஞ்சு விற்பனை**

4 கிழமை நிரம்பிய Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30027)

**டாக்டர்கள் தேவை**

M. B. B. S., R. M. P., A. M. P. தரத்திலுள்ள டாக்டர்கள் யாழ். குடாவிற்குள்ளும், வெளியிலும் (வன்னிப் பிராந்தியம்) இயங்கும் பொதுஸ்தாபனத்தில் கடமையாற்றத் தேவை. 1-4-94 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நிர்வாகி, வில்லியம் ஹாவே, தனியார் மருத்துவமனை, இல. 17, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (30003)

**இலவச திருமண சேவை**

30 வயது, உத்தராடம் 3, செவ்வாயற்ற இந்தியாவில் Diploma Mechanical Engineering சித்தி பெற்றவருக்கு Sponsor மூலம் அழைக்க முடிந்த மணமகள் தேவை. தொடர்பு: ஞாயிறு, செவ்வாய் காலை, புதன் மாலை விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோயில். (30039)

**பாலர் ஆசிரியர்**

1994-04-02 ஆரம்பம். ஜி. சீ. ஈ. (O/L) கல்விச் சித்தி தகைமை சனி, ஞாயிறு வர முடியாதோர் தபாலிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7155)

**கோழிக் குஞ்சு**

Prima Broiler குஞ்சுகள் 25-03-94 வெள்ளிக்கிழமை பெற்றுக் கொள்ளலாம். உடன் பதிவு செய்யவும். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30026)



140 அடி நீளமான பிரமாண்டமான
மேடையில்
**'சாவு தந்த வாழ்வு'**
(இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி)
**24 - 03 - 1994** இன்று
மாலை 6 30 மணி
உரும்பிராய்
**புனித மிக்கேல் ஆலயம்**

எமது பாடுகளை இயேசுவின் பாடுகளோடு ஒன்றிக்க அன்புடன் அழைக்கிறோம்.

பங்குத் தந்தையும்,
பங்கு மக்களும்.

(30048)


### தமிழ்ப் பாடகி போதையில் கலாட்டா!

கொழும்பு, மார்ச் 24

பாங்கொக்கில் இருந்து கடந்த 18 ஆம் திகதி விமான மூலம் வந்த தமிழ்ப்பாடகி ஒருவர் அளவுக்கு மீறி மது அருந்தியதால் ஏற்பட்ட போதையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்த சுங்க அதிகாரிகளை தாக்க முயன்றார் என்றும் —

தகவல் கிடைத்து விமான நிலையப் பொலீஸார் அவரைக் கைது செய்து நீர் கொழும்பு பதில் நீதிவான் கொட்பிரே கூரே முன்னிலையில் ஆஜர் செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வழக்கு விசாரணை இம் மாதம் 25 ஆம் திகதிக்குப் பின் போடப்பட்டது. சந்தேக நபர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். (உ-எ-6)


## பிறந்த நாள் வாழ்த்து

**துஷ்யந்தன் (துஷி)**

S. S நாதன்- ஜெயந்திமதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் துஷ்யந்தன் (துஷி) தனது முதலாவது பிறந்த நாளை, இன்று (24-03-94) வெகு விமரிசையாகத் தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அத்தைமார், மாமாமார் பலரும் பெற்று, பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள். (7152)



**யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை**
**பழைய மாணவர் சங்க நிதிக்கான**
**சீட்டிழுப்பு முடிவுகள்**

1ஆம் பரிசு இல. 0530
2ஆம் பரிசு இல 0703
3ஆம் பரிசு இல. 0454

[30044]



உ
ஓம் சாயி ராம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் பங்குனித் திங்கள் 14ஆம் நாள் (27 03-1994) ஞாயிறு பகல் 11-26 மணி தொடக்கம் 12-14மணி வரையுள்ள உத்தர நட்சத்திரமும், சித்தாமிர்த யோகமும் கூடிய சுபயோக சுபமுகூர்த்தவேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**சுதாகரன்**
(இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
**சசிகலா**
(ஆசிரியை, நாகேஸ்வரி மகா
வித்தியாலயம், சரவணை)
அவர்களுக்கும்

பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று கந்தர்மடம் பழம்றோட்டுப் பிள்ளையார் கோயிலில் நடைபெறும் திருமணத்திற்கும், மதியபோசன விருந்துபசாரத்திற்கும் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து, புதுமணத் தம்பதிகளுக்கு நல்வாழ்த்துக் கூறி சிறப்பிக்குமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை வேண்டி நிற்கும் ★

திருமதி ச. இராமலிங்கம்,
இல. 884, ...
யாழ்ப்பாணம்.

திருமதி மு. குருசாமி.
... கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

[30040]



யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்
மகோற்சவ
**சப்பறத் திருவிழா விஞ்ஞாபனம்**

இன்று 24-03-94 காலை 10 மணிக்கு புதிய சப்பற வெள்ளோட்ட விழா.

மாலை 4 30 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
பொருள் 'வேகங் கெடுத்தாண்ட வேந்தன்'
7 மணிக்கு புதிய சப்பறத்தில் சுவாமி வீதி உலா

மங்கள இசை

K. கணேசன் K. வீரச்சாமி
N. K. பத்மநாதன் குழுவினர்.
S. S. சிதம்பரநாதன் குழுவினர்.
V. K. கானமூர்த்தி V. K. பஞ்சமூர்த்தி குழுவினர்.
T. உதயசங்கர் R கேதீஸ்வரன் குழுவினர்.

(சி/7459) சிவதொண்டன்


## 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
09
—
05
—
1993



மறைவு:
22
—
02
—
1994

**திருமதி கந்தையா இராசம்மா**

பாசத்துடன் வளர்த்த எமது தாயாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை இன்று சண்டிக்குளியிலுள்ள எமது இல்லத்தில் இடம் பெறும். அத்தருணம் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

- குடும்பத்தினர்.

''குமரவாசம்''
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

107/2. மொறிஸ் வீதி,
சண்டிக்குளி.

(30046)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அரசாங்கத்தின் அடங்காத்தனம்!

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் கடந்த ஜனவரி மாதத்தில் இலங்கையின் இன்றைய பிரச்சினை குறித்துத் தெரிவித்த கருத்து, இரண்டரை மாதங்கள் கழிந்தும் இன்னமும் பொருத்தமுடையதாகவே இருக்கிறது.

வடக்கு - கிழக்கில் தொடர்ந்து சிங்களவர்களும் தமிழர்களும் யுத்தம் நடத்தி வருவது, ஒருவருக்கொருவர் மோதி வருவது குறித்து பாப்பரசர் வத்திக்கானுக்கான இலங்கைத் தூதரிடம் கவலை தெரிவித்திருந்தார்.

அவர் வெறுமனே கவலை தெரிவித்ததுடன் மட்டும் நிற்கவில்லை. பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான மிக மிக அடிப்படையான வழிமுறை ஒன்றையும் இலங்கை அரச பிரதிநிதிக்குச் சொல்லிக் கொடுத்தார்.

மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினர் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசுவதற்கு விருப்பம் தெரிவிப்பது ஒன்றே பிரச்சினைகளுக்குச் சமத்துவமான தீர்வு ஒன்றை அடைவதற்கு தவிர்க்க முடியாத நிபந்தனையாக இருக்கிறது என்பதே பாப்பரசர் தெரிவித்த புத்திமதி.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஸ்ரீலங்கா அரசு கடைப்பிடித்து வரும் தவறான அணுகுமுறையை பாப்பரசர் அவர்கள் சரியாக அறிந்துள்ளார்கள்; புரிந்துள்ளார்கள். உணர்ந்துள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு வேளையில் இராணுவத் தீர்வு என்றும், மறுவேளையில் அரசியல் தீர்வு என்றும் கூறிக் கொண்டு, இராணுவத் தீர்வின் மூலம் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி, அதன் பின்னர் தனக்கு வாய்ப்பான ஒரு தீர்வைத் திணிப்பதே ஸ்ரீலங்கா அரசின் நிலைப்பாடாக இருந்து வருகிறது.

அதனாலேயே போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சமாதானப் பேச்சுக்களை நடத்துவதில் அரசு உண்மையான அக்கறை கொள்ளாதிருக்கிறது. கருத்து முரண்பட்ட இரு சாரார் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கும் தமது பிரச்சினைகளை மனம் விட்டு ஆலோசிப்பதற்கும் அவர்கள் சந்திக்க வேண்டும். பேச்சுவார்த்தை என்பதன் அர்த்தமே அதுதான்.

ஆனால் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குத் தான் தயார் என்று கூறிக்கொண்டே அதனை ஆரம்பிப்பதற்கு பல முன் நிபந்தனைகளை விதித்து வருகிறது. இங்கே தான் பாப்பரசரின் புத்திமதி ஸ்ரீலங்கா அரசுக்குத் தேவையானதொன்றாகிறது; பொருத்தமாகி வருகிறது.

பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, முரண்பட்ட இரு சாராரும் சந்தித்துப் பேசுவதே, அதற்கு விருப்பம் தெரிவிப்பதே தவிர்க்க முடியாத நிபந்தனையாக இருக்கும் போது, பேச்சை ஆரம்பிப்பதற்கு முன் நிபந்தனை விதிப்பது என்பது அதற்கு முட்டுக்கட்டை போடுவதன்றி வேறில்லை.

ஆகையால் பரிசுத்த பாப்பரசரைப் போல, ஏனைய உலகத் தலைவர்களும் நிபந்தனையில்லாத பேச்சுவார்த்தை நடத்துமாறு ஸ்ரீலங்கா அரசுக்கு இடித்துரைக்க வேண்டும்.

கனியே கனியே விழு என்று கூறிக்கொண்டிருந்தால் அது வந்து மடியில் விழுந்து விடுமா? அதனைப் பறித்தால் தானே உண்ண முடியும். ஸ்ரீலங்கா அரசாங்கம் வெறுமனே பேச்சுவார்த்தை என்று வாயால் சொல்கிறதே அன்றி, அதற்கான நேர்மையான செயற்பாடு எதிலும் ஈடுபடுவதாக இல்லை.

உகந்த ஒரு சூழ்நிலையில் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து அது முறிந்து போவது ஒரு வகை. அது கூடப் பரவாயில்லை. ஆனால் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காமல் அதற்கு முன் நிபந்தனை விதித்து முட்டுக்கட்டை போடுவது அதில் அக்கறையின்மை என்ற அடங்காத்தனமே.

# சிங்களவருக்குள்ள உரிமைகள் நாட்டின் மற்ற மக்களுக்கும்

## கொழும்புக் கருத்தரங்கில் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 24

இந்த நாட்டைத் தாயகமாகக் கொண்ட அனைவருக்கும் இந்த நாடு சொந்தமானது. பெரும்பான்மையினரான சிங்களவருக்குள்ள அனைத்து உரிமைகளும் அவர்களுக்கும் உண்டு. எனவே இந்த நாட்டில் வாழும் அனைவரின் நலன்களையும் பாதுகாப்பது எனது பொறுப்பாகும்.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இவ்வாறு கூறினார். அவர் மேலும் அங்கு கூறியதாவது:

நாம் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். எம் நாட்டைப் பொறுத்தவரை சமூக யதார்த்தம் என்ன? இந்த நாடு சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்டுள்ளதுடன், வேறு இன மக்களும் இந்நாட்டை தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் அனைவருமே இந் நாட்டுப் பிரஜைகள். நான் ஜனாதிபதி என்ற ரீதியில் அவர்களின் சேவகன்.

நான் ஒரு இனத்திற்கு மட்டும் ஜனாதிபதி இல்லை. இந் நாட்டில் உள்ள அனைவரின் நலன்களையும் பாதுகாப்பது என் பொறுப்பும் இது எனது அரசின் பொறுப்புமாகும்.

முன்னைய காலத்தைப் போல் நினைக்கவோ, வாழவோ இப்போது முடியாது. கடந்த காலக் கொள்கைகள் இப்போது நமக்குப் பொருந்தாது. நாம் வாழ்வது 20ஆம் நூற்றாண்டு என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டில் வாழும் சகல இன மக்களினதும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது உலக அபிப்பிராயம். உலக நாடுகளில் இருந்து விலகி எமக்கு வேண்டியது போல் தனித்து வாழ முடியாது. பெரும்பான்மையினர் சிறுபான்மையினருடன் மோத வேண்டிய அவசியமில்லை. பெரும்பான்மை இனத்தின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால் அது சிறுபான்மை மக்களைப் பாதிக்காத வகையில் இருக்க வேண்டும்.

அந்தக் காலத்தில் நிகழ்ந்த சில தவறுகள் இன்னமும் எமது கொள்கைகளைப் பாதித்தே வருகின்றன. ஏகாதிபத்திய ஆட்சியை பாதுகாக்க இனங்களுக்கிடையில் மோதல் ஏற்படும் வகையில் கொள்கைகள் வகுக்கப்பட்டன. இதனால் அநீதி இழைக்கப்பட்டது. எமக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் இவற்றை நிவர்த்தி செய்து வருகின்றோம்.

நாம் தொடர்ந்தும் பெரும்பான்மை சிறுபான்மை என்று பேதம் காட்ட வேண்டிய அவசியமில்லை. நாம் அனைவரும் இந்நாட்டை தாயகமாகக் கொண்ட பிரஜைகள் என்றார். (த-9)

# ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி மாவட்ட ரீதியாக வேண்டும்

## வடபிரதேச மக்கள் வங்கி முகாமையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 24

"ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கி வரும் நிதி உதவியை மாவட்ட ரீதியாக வழங்க வேண்டும்"

மேற்கண்ட கோரிக்கை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு வந்திருந்த ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரியான திருமதி. டொறதி ஹாக்கிடம் வடபிரதேச மக்கள் வங்கி முகாமையாளர் திரு. இ. அருளானந்தம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்:

ஆசிய அபிவிருத்தி வங்கி வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வழங்கி வரும் புனர்வாழ்வுக் கடன் கணக்குகளை மதிப்பீடு செய்வதற்காக இவர் கொழும்பு வந்து வங்கி, அரச அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

அச்சமயம் கொழும்பில் தங்கியிருந்த மக்கள் வங்கி வடபிரதேச முகாமையாளருடன் அவர் இருமணி நேரம் பேச்சு நடத்தினார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியால் வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கென வழங்கப்படும் நிதி முறைப்படி அங்கு கிடைப்பதில்லை என்று அவரிடம் தெரிவித்தார்.

இதனைத் தவிர்க்கும் வகையில் ஆசிய அபிவிருத்தி வங்கியே யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்களுக்கு இவ்வளவு நிதி என்று ஒதுக்கீடு செய்தால் யுத்தத்தால் இன்னல் படும் மக்களுக்கு கூடுதல் உதவியை வழங்கக்கூடியதாக இருக்கும் என்று ஆலோசனை வழங்கினார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக வழங்கப்படும் இந்நிதி தேவையற்ற வகையில் வேறு இடங்களுக்குச் செல்வதையும் தவிர்க்க முடியும் என்றும் — அவர் ஆலோசனை தெரிவித்தார்.

தமது தலைமையகத்துக்கு இவ்விடயத்தை தெரிவித்து தமிழ் மாவட்டங்களுக்கு கூடுதல் நிதியை வழங்க நடவடிக்கை எடுப்பதாக ஆசிய வங்கி அதிகாரி தெரிவித்தார். (க-8)

## சாவு தந்த வாழ்வு திருப்பாடுகள் காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 24

தவக்காலத்தை முன்னிட்டு "சாவு தந்த வாழ்வு" என்னும் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் மேடை ஏறுகிறது.

உரும்பிராய் பங்குத் தந்தை அருட் தந்தை ஜெ. பி. அன்ரனிதாஸ் அடிகளாரின் நெறியாள்கையில் உரும்பிராய் பங்கு வரலாற்றில் 140 அடி நீளமான பிரமாண்டமான மேடையில் இக்காட்சி மேடை ஏறும். இந்த வைபவத்தில் யாழ். ஆயர் மகா வந்தனைக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ்ப்பாண மறைக் கோட்ட முதல்வர் அருட் திரு. யேம்ஸ் பத்திநாதர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார் (இ)

## பாடசாலைகளில்

அச்செழு மெதடிஸ்த மிசன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டி இன்று வியாழக்கிழமை அதிபர் திரு. எஸ். நடனபாதம் தலைமையில் நடைபெறும். (இ-11)

★ ★ ★

வரணி குடமியன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வியாழன் பிற்பகல் 200 மணிக்கு அதிபர் திருமதிம வீரசக்தி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். (இ-117)

## துணைவேந்தருக்குப் பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

கடந்த ஆறு வருடங்களாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணியாற்றி இம்மாத இறுதியுடன் பதவி விலகிச் செல்லும் பேராசிரியர் அ. துரைராசாவுக்கு பல்கலைக்கழக சமூகம் அளிக்கும் பிரமாண்டமான பிரிவுபசார விழா நாளை மறுதினம் பிற்பகல் 6மணிக்கு பல்கலைக்கழக முன்றிலில் நடைபெற இருக்கிறது.

யாழ். மாவட்ட மக்கள், பல்கலைக்கழக சமூகம், பொது அமைப்புகள், அரச திணைக்கள தலைவர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள இவ்விழா அன்று பிற்பகல் 6மணிக்கு பேராசிரியரின் உருவப்படம் சபையறையில் திறந்து வைப்பதுடன் ஆரம்பமாகும்.

பிரதான நிர்வாக அலுவலகத்தில் இருந்து பேராசிரியர் தம்பதிகள் தவில் நாதஸ்வர தவில் கலைஞர்களின் மங்கள இசையுடன் ஊர்வலமாக பரமேஸ்வரன் ஆலயம், விஞ்ஞானபீட வீதி, இராமநாதன் வீதி வழியாக பல்கலைக்கழக முன்றிலில் அமைந்துள்ள விசேட மேடைக்கு அழைத்து வரப்படுவார்.

பிற்பகல் 7 மணி முதல் 8 மணி வரை பதில் துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினம் தலைமையில் பாராட்டு விழா இடம்பெறும்.

ஆசிரியர்கள் சார்பில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, ஊழியர் சார்பில் பல்கலைக்கழக பதிவாளர் திரு க. பரமேஸ்வரன், மாணவர் சார்பில் க. ராகவாச்சாரியார், பொதுமக்கள் சார்பில் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரனும் கலந்து உரையாற்றவிருக்கிறார்.

அதைத் தொடர்ந்து துணைவேந்தர் பதில் உரையாற்றுவார்.

அதன்பின் 9 மணி வரை இராமநாதன் நுண்கலைத் துறையினர் வழங்கும் மெல்லிசை இடம்பெறும். இராவிருந்தும் நடைபெறும். (க-8)

## இன்று

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவுக்கு பிரிவுபசார வைபவம் ஒன்று இன்று (வியாழன்) பிற்பகல் 4 மணிக்கு யாழ். தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெற விருக்கிறது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழில்பகுதியினர் இவ்வைபவத்தை ஏற்பாடு செய்துள்ளனர். (இ-8)

★ ★ ★

மலேரியா தடுப்பு வாரத்தை யொட்டி இடைக்காடு மகா வித்தியாலயத்தில் இன்று நண்பகல் "செப்ரீசீமியாவும் சுகாதாரப் பிரச்சினைகளும்" என்னும் தலைப்பில் சுகாதார கருத்தரங்கு ஒன்று நடைபெற விருக்கிறது.

வித்தியாலய அதிபர் திருமதி விமலாசனி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும். இக் கருத்தரங்கில் டாக்டர் சிர்மாறன், டாக்டர் குகபாலன், யாழ். லயன்ஸ் தலைவர் திரு. ஈஸ்வரன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (இ-3)

★ ★ ★

மலாளி ஆசிரிய கலாசாலை முத்தமிழ் மன்றம் நடத்தும் கல்விக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 1 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

"பாரதியின் குயிற்பாட்டு" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜா தலைமையில் கருத்தரங்கு இடம்பெறும். (உ-5)

## விளையாட்டு நிகழ்வு

யாழ். பிரதேச செயலர் பிரிவு கழகங்களுக்கு இடையில் யாழ்ப்பாணம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும்.

இறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் வி. க. அணியை எதிர்த்து குருநகர் [illegible] (உ-5)

## அபிவிருத்தி சபையின் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

உயரப்புலம் குயபாலன் வித்தியாலய அபிவிருத்தி சபையினர் இப்பாடசாலை மாணவரின் நலன் கருதி முப்பதாயிரம் செலவில் இரு கொட்டகைகளை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இதில் ஒரு கொட்டகையில் சிறந்த முறையில் ஆய்வகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. (க-162)

டி. பி. யின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"இன்று எந்தத் தலைவரோ அல்லது அமைப்போ இனம், மதம், சாதி மற்றும் வர்க்கத்தின் பேரால் ஆதரவு தேடுவதன் மூலம் செல்வாக்குப்பெற முடியாது என்பது தெளிவாகியுள்ளது.

"அபிவிருத்தி, பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, தொழில் வாய்ப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைகளை அடிப்படையாக வைத்தே அரசியல் போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும். இதற்கு ஆளும் கட்சி ஏனைய கட்சிகளுக்கு உதாரணமாக விளங்க வேண்டும். ஆளும் கட்சித் தலைவர்கள் இது விஷயத்தில் ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும்.

இனரீதியில் அல்லது அடிப்படைவாதத்தில் அரசியல் நடத்தப்படக் கூடாது. முக்கிய தேசியப் பிரச்சினைகளை மையமாக வைத்தே அரசியல் நடத்தப்பட வேண்டும்.

கடந்த காலத் தேர்தலில் அரசாங்கத்துக்கு வாக்களித்த சிறுபான்மையினத்தவர் இம்முறை கிழக்கில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்கவில்லை.

தென் மாகாணசபைத் தேர்தல் முடிவு பெரும் பான்மை இனத்தவரை வகுப்புவாதப் போக்கு திருப்பிவிடுகிறதா என்பதை நிரூபிக்கப் போகிறது.

### நாட்டின் தலைமைத்துவம் கேள்விக்குறியில்

அண்மைக்காலமாக அரசியல் வாதிகள் விடுத்து வரும் அறிக்கைகள், இலங்கையின் தலைமைத்துவத்தின் எண்ணங்கள் பற்றி பாரதூரமான கேள்விகளை எழுப்பியுள்ளன. இலங்கையின் தலைமைத்துவம் இன சௌஜன்யத்தை கொண்டுவருகிறதா அல்லது இனக்குரோதத்தை கொண்டு வருவதில் ஈடுபட்டுள்ளதா?

வகுப்புவாதமாகப் பேசக் கூடாது என்று அரசாங்கம் தனது அரசியல் வாதிகளுக்கும் ஏனைய அரசியல் வாதிகளுக்கும் உத்தரவிட வேண்டும்.

நாடாளுமன்றம் இதற்கு நல்ல ஆரம்பமாக இருக்க முடியும். நாடாளுமன்ற சிறப்புரிமையை சிலர் துஷ்பிரயோகம் செய்கின்றனர். நாடாளுமன்றச் சிறப்புரிமை வகுப்புவாதத்தை ஊக்குவிக்க பயன்படுத்தப்படக் கூடாது.

### புலிகள் பூரணமாக பயன்படுத்துகின்றனர்.

அரசாங்கமும் ஏனைய அரசியல் கட்சிகளும் கடைப்பிடிக்கும் வகுப்புவாத போக்கை விடுதலைப் புலிகள் தங்களுக்கு பூரணமாக பயன்படுத்திவருவதை உணருவதற்கு இன்றைய அரசியல் வாதிகள் தவறிவிட்டனர்.

வகுப்புவாதப் போக்கைக் கைவிடுவது என்று அரசாங்கமும் ஏனைய கட்சிகளும் தீர்மானிப்பின் அது விடுதலைப் புலிகளுக்கு பாதகமாக இருக்கும்.

ஆகவே விடுதலைப் புலிகளின் தீவிரவாதத்தை வெற்றி கொள்ள வேண்டும் என்றால் தமிழ் மக்களை வெற்றிகொள்ள வேண்டும் என்பதை உணர்ந்தாக வேண்டும். இலங்கையின் வகுப்புவாதத்தை ஒழிப்பதற்கு முன்னுதாரணமாக அரசாங்கம் நடந்து கொள்வதன் மூலமே இதைச் சாதிக்க முடியும்.

இது அரசாங்கத்தின் வீட்டு வாசல் படியில் இருந்து இது ஆரம்பமாக முடியும்.

—இவ்வாறு 'பொதுசன தொடர்பு சாதனம், இன ஒற்றுமை மற்றும் தீவிரவாதம்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-எ)

## அன்னை பூபதி தின சிரமதான நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

அன்னை பூபதி நினைவாக இன்று முதல் பல இடங்களில் சிரமதான நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன.

இன்று—கைதடி வட்டத்தில்—மறவன் புலோவில் வீதி புனரமைப்பும்—

சாவகச்சேரி வட்டத்தில்— ஆனைவிழுந்தான் தேவாலயம் துப்பரவாக்கலும்—

கொடிகாம வட்டத்தில் — வரணியில் சந்தையடி துப்புரவாக்கலும்—

பளை வட்டத்தில் - புலோப்பளையில் — அரசினர் வைத்தியசாலை சூழல் துப்புரவாக்கலும்—இடம்பெறும்.

## கொழும்பில் கைதானோர் 24 மணி நேரத்துக்குள் நீதி மன்றத்தில் ஆஜர்

யாழ்ப்பாணம், மார்ச் 24

கொழும்பில் கைதாகும் தமிழர்கள் கைது செய்யப்பட்டு 24 மணி நேரம் மட்டுமே பொலிஸ் நிலையத்தில் வைக்கப்படுகின்றனர் என்றும்—

கைது செய்யப்படுபவர்களின் உறவினர் அந்நேரத்துக்குள் பொலிஸ் நிலையத்தில் ஆஜராகாவிடின் அவர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர் என்றும் கொழும்பு தகவல் ஒன்று தெரிவித்தது.

கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் 24 மணி நேரத்துக்குள் வராதவிடத்து மறுநாள் அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு மூன்றுமாத தடுப்புக் காவலில் வைக்கப்படுகிறார்.

மூன்று மாதத்துக்குள் அவரது உறவினர் நீதி மன்றத்தில் ஆஜராகாது விட்டால் அவர் மேலும் மூன்று மாதம் தடுப்புக் காவலில் வைக்கப்படுகிறார் என தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் அழுத்தம் காரணமாக கைதாகும் தமிழர் குறித்து அரசு இப்புதிய நடைமுறையை அமுல் செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ 8)

யாழ்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றேன். அவர்கள் அம்மாந்தோட்டை, காலி போன்ற இடங்களுக்கு சென்று சிங்கள மக்களுடன் பேசினர். அவர்கள் எல்லோருமே சமாதானம் வேண்டும் என்றே கூறியுள்ளனர்.

அரசைப் பொறுத்த வரை விடுதலைப் புலிகள் மீது நம்பிக்கை இல்லாததால் முன்வரத் தயங்குகிறார்கள்.

இந்த யுத்தத்தில் நாம் வெல்ல முடியாது என இரண்டொரு மந்திரிகள் என்னிடம் கூறினர்.

லண்டனில் தொழிற் கட்சியினருக்கு இலங்கையில் உள்ள சூழ்நிலை பற்றி விளக்கமளித்துள்ளேன். இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொல்வதை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அரசு சமாதானப் பேச்சுக்கு முன்வர வேண்டும்.

சிங்கள அரசாங்கம் தமிழர்களை மனிதர்கள் என்று ஏற்றுக் கொண்டிருந்தால் இன்றைய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. தமை நிமிர்ந்து போராடுபவர்களை அரசு மதிக்காத வரை அங்கு சமாதானம் நிலவுவோ வரமாட்டாது.

—இவ்வாறு தமிழோசைக்கு வழங்கிய பேட்டியின் திரு. சின்னமணி மேலும் குறிப்பிட்டார். [உ-5]

## கலை நிகழ்ச்சிகள் ஒத்திவைப்பு

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 60 ஆவது ஆண்டு விழாவை ஒட்டிய கலை நிகழ்ச்சிகள், மதிப்பளிப்பு, கௌரவித்தல் ஆகியன பிற்போடப்பட்டுள்ளன;

இம்மாதம் 26, 27 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த இந் நிகழ்ச்சிகளை அடுத்த மாதம் 13 ஆம் 14 ஆம் திகதிகளில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (க-17)

சிந்தூரன் வீடியோ ஓடியோ சென்ரர்
55, பலாலி வீதி, திருநெல்வேலி.

எமது புதிய வெளியீடுகள்

சூரியா
* சுப்பர் ஸ்டார் விஜயசாந்தி, லக்சுமி, சுஜாதா

பொண்டாட்டி தெய்வம்
* S.V. சேகர், சித்தாரா

புதிய பழைய திரைப்படங்களையும், புதிய பழைய படப் பாடல்களையும், STEREO முறையில் ஒலிப்பதிவு செய்து உங்கள் காதுகளுக்கு இன்னிசை விருந்தாக்க இன்றே நாடுங்கள்.

CD இல் (COMPACT DISC) இல் வெளிவந்துள்ள புதிய படவரிசைகள் சில

| | |
|---|---|
| இந்து | சேதுபதி I.P.S. |
| மகளிர் மட்டும் | ராஜகுமாரன் |
| செந்தூரபாண்டி | அமைதிப்படை |
| வீட்டில விசேஷங்க | காவல்துறை |
| I LOVE இந்தியா | எங்க முதலாளி |
| LOVE 93 | ரேஜாக்கள் உனக்காக |
| மாப்பிள்ளைதோழன் | ஜாக்பட் |
| மின்மினி பூச்சிகள் | சபாஷ்பாபு |
| கிளிபேச்சு கேட்கவா | கட்டபொம்மன் |
| காலேஜ் ரோஜா | உழவன் |
| சின்ன ஜமீன் | பரதன் |

(80030)

வளமான நாட்டில் வாழ்வினில் சிறக்க வதிவிட வேளாண்மை செய்தலே உகந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநெல்வேலி சிவன் கோயில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

மஹா கும்பாபிஷேகம் 27 — 03 — 1994 ஞாயிற்றுக்கிழமை காலை 7-45 மணிமுதல் நண்பகல் 12-00 மணிவரையான சுபவேளையில் பிரதிஷ்டாகுரு சிவஸ்ரீ ச. யோகீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

கிரியாரம்பம்: 23 — 03 — 1994 புதன்கிழமை காலை 6மணி முதல்

எண்ணெய்க்காப்பு:

25 - 03 - 1994 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி முதல் 26 - 03 - 1994 சனிக்கிழமை நண்பகல் 12-00மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு நிறைவுசெய்யலாம்.

முக்கிய கிரியைகளிலும் இறைவனுக்கு எண்ணெய் சாத்தி பேரின்ப பேறு அடைவதிலும் பக்தர்கள் பங்கு கொண்டு இறையருள் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தேவஸ்தானமும்,
ஆலய நிர்வாக சபையாரும்.

திருநெல்வேலி சிவன் கோயில்,
திருநெல்வேலி. [30045]

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணுலகில்: 10-05-1926

விண்ணுலகில்: 15-03-1992

அமரர்

### காசிப்பிள்ளை சபாரத்தினம்

திதி: 24-03-1994

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்ற எங்கள் பாச தெய்வமே! ஈராண்டு கழிந்ததப்பா உங்கள் நினைவுகள் நிதம் எங்களை வாட்டுதப்பா! நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவுகளுடன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரன்,
உறவினர்கள், நண்பர்கள்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (சி/2077)

இறைவனிடம் சரணடைந்த

## 31ஆம் நாள் நினைவு தினம்



### திருமதி மேரி இராசமலர் நவரத்தினம்

தாயின் மடியில்: 12 — 10 — 1930
இறைவனடியில்: 22 — 02 — 1994

கிறிஸ்து உன்னை வானரசில் சேர்த்தருள்வாராக (சங்; 113)

சீவியத்தில் நேசித்தோம் மரணத்தில் மறவோம்
கருணையின் வள்ளலே நீதியின் தேவனே.

மன்னுயிர்களிடத்தில் இரக்கம் காட்டுவதும் பொறுத்தல் அளிப்பதும் உமக்கு இயல்பாமே உமது இரக்கத்தால் மீட்படைவதாக நம்பியிருந்த உமது அடியாள் திருமதி நவரத்தினம் மேரி இராசமலர் என்பவரை விரைவில் உம்மிடம் அழைத்துக் கொண்டது போல விரைவாகவே அவ ஆன்மாவை உமது நித்திய வான் வீட்டில் இளைப்பாறச் செய்தருள வேண்டுமென்று உம்மை இரந்து மன்றாடுகின்றோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இன்று 24 - 03 - 1994 காலை 6-15க்கு திருப்பலியும் மாலை 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டிலும் பங்குபற்றி அவரின் ஆன்ம சாந்திக்காக மன்றாடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
சகோதரர், பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

[30004]

உலக நாடுகளில்

# மகளிருக்கு எதிரான வன்செயல்; ஐ. நா. தனி அதிகாரி விசாரிப்பார்!

பெண்களுக்கு எதிரான வன்செயல்களை விசாரிக்க விசேட விசாரணையாளர் ஒருவரை நியமிப்பது என்று 53 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

பாலியல் ரீதியான பாரபட்ச நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வருமாறு உலக அரசாங்கங்களை கேட்டுக் கொள்ளும் பிரேரணை ஒன்றையும் ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு நிறைவேற்றியது.

ஜெனிவாவில் கடந்த ஆறு வார காலமாக நடந்த ஐ நா மனித உரிமை ஆணைக்குழுவின் வருடாந்த அமர்வின் போது இரு தீர்மானங்களும் கருத்துடன்பாட்டு மூலம் நிறைவேற்றப்பட்டன.

பெண்களுக்கு எதிரான வன்செயல்கள் பற்றி விசாரணை நடத்த நியமிக்கப்படும் விசேட விசாரணையாளர் மூன்று ஆண்டு காலம் பதவியில் இருப்பார் என்றும் —

வன்செயல்கள் பற்றி மட்டும் விசாரணை நடத்தாமல் அதற்கான காரணங்கள், விளைவுகள் குறித்து அவர் ஆய்வு செய்து 1995 முதல் ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவுக்கு ஆண்டு தோறும் அறிக்கை சமர்ப்பிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது விசேட ஆணையாளராக நியமிக்கப்படுபவரின் பெயர் அடுத்த மாதம் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## ஆலயங்களில்

அரியாலை நீர் கொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் வருடாந்த சிவபெருமான் உற்சவம் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறுகிறது.

இரதோற்சவம் 26 ஆம் திகதியும். தீர்த்தோற்சவம் 27 ஆம் திகதியும் நடைபெறும். (க-30)

★ ★ ★

சுழிபுரம் ஈஸ்வர விநாயகர் ஆலயத்தில் பன்னிரு திருமுறைப் படிப்பு பூர்த்தியும் பாத யாத்திரையும் இன்று வியாழன் நடைபெறவுள்ளன.

## கலந்துரையாடல்

யாழ் அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல வர்த்தகர்களுக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை, தொழில்துறை முக்கிய பிரமுகர்கள் கலந்துரையாடலில் கலந்து கொள்வார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமயப் பெருவிழா

சுவாமி விவேகானந்தரின் உலக சமய பெருவிழா இம் மாதம் 26ஆம் திகதி பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசாமி தலைமையில் நடைபெறும். (க-117)

## யோக சுவாமி குருபூசை

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் இன்று யோகசுவாமிகள் விழா கொண்டாடப்படவுள்ளது.

இந்துமாமன்றத் தலைவர் செல்வன் சி நிர்மலேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் புலவர் க. தேவதாசன், ஆசிரிய மணி கா. சின்னத்துரை ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

★ ★ ★

யோக சுவாமி குருபூசை இன்று வியாழக்கிழமை காலை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் அதிபர் திரு சி. ஆ. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும்.

குருபூசையில் கலாநிதி ப கோபாலகிருஷ்ணன், ஆத்மஜோதி நா. முத்தையா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவார்கள். (க-30)

## இசையாராதனை

யாழ்ப்பாணம், மார்ச். 24

ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் மிருதிகா பிருந்தாவன ஆதரவிலான இசையாராதனை இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 30 மணிக்கு நல்லூர் கோவில் வீதியில் நடைபெறும். ஸ்வரராகலய விநோத சுரபி சங்கீதபூசணம் எல். திலகநாயகம் போல் இசையாராதனை நிகழ்த்துவார்.

வித்துவான் ஆர். எஸ். கேசவமூர்த்தி வயலினும், மிருதங்கக் கலைமணி க. கண்ணதாசன் மிருதங்கமும், செல்வன் எஸ். ரதிரூபன் கடமும் எஸ். ராஜா முகர்சிங்கும் வாசிப்பார்கள். (3)

## நாளை

சந்நிதி ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3மணிக்கு காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு. ஆ. சிவகுமாரன் "முத்திக்கொரு வித்து" என்னும் பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் திரு. ஐ. சண்முகலிங்கம் அறிமுகவுரையை நிகழ்த்துவர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 20 — 01 — 1932

இறப்பு: 22 — 02 — 1994

திருமதி

### தெய்வானைப்பிள்ளை மயில்வாகனம்

உங்கள் இல்லற
இருப்பினை
இமைகளில் சுமக்கின்றோம்
உங்கள் நல்லற
ஆலோசனைகளை
இதயங்களில் இருத்துகிறோம்
வாழ்ந்திட்ட வருடங்களுக்கப்பால்
உங்கள் வாழ்வினை
யாசிக்கின்றோம்
மொழிந்திட்ட வார்த்தைகளுக்கப்பால்
உங்கள் பாசத்தினை
நேசிக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

50/14, செட்டித்தெரு,
நல்லூர். [30007]

## முதலாவது சிரார்த்த தினம்



### செல்வி தெ. சுதர்ஜா

(உடுவில் மகளிர் கல்லூரி முன்னாள் மாணவி)

தாயின் மடியில்: 28 - 01 - 1987
ஆண்டவன் மடியில்: 20 — 03 — 1993

அன்பின் மகளே! ஆண்டு ஒன்று ஆனாலும்; இன்னும் பல ஆண்டு ஆனாலும், எங்கள் மனதைவிட்டு உன்னை மறக்க முடியுமா?

என்றும் மறவாத!
அம்மா அப்பா, தம்பி,
அம்மம்மா சித்தி, மச்சான்மார்,
மச்சாள்மார்.

"இந்திரபதி"
சங்கானை. (7148)

## முதலாம் ஆண்டு நினைவாக...



உதயத்தில்: 28-07-1971

எம் இதயத்தில்: 24-03-1993

அமரர்

### ஞானசூரியர் வில்சன் நிக்கலஸ்

(மருத்துவபீட மாணவன், 14 ஆம் அணி)

காலத்தின் இதழ் ஒன்று
கழன்று போனாலும் — உன்
சிலத்தின் நினைவுகள் — இஞ்
ஞாலத்தின் நாதமாய் — உள்மன
ஆழத்தில் எழுந்து — ஆக்
காலத்தை வெல்லும் — உன்
கரங்கள் பற்றிய எம் கைகள் — உன்
கண்ணுடன் கலந்து கசிகின்ற விழிகள்
எம் உணர்வதைச் சொல்லும் — உன்
நினைவதை மெல்லும்.

14 ஆம் அணி நண்பர்கள்
மருத்துவ பீடம்,

[30056]

## மரண அறிவித்தல்கள்

### சரஸ்வதி சோமசுந்தரம்

புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகவும், யாழ் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சோமசுந்தரம் 19-03-94 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்தர் — செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், மு. சோமசுந்தரத்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியரும், பிரபல ஆர்மோனிய வித்துவானும்) அன்பு மனைவியும், தயாநிதியின் அன்புத் தாயாரும், க. உதயகுமாரின் (ஆசிரியர் சென் பீற்றேஸ் கல்லூரி, வெள்ளவத்தை) அன்பு மாமியாரும், மஞ்சுபாஷினியின் அன்புப்பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கோவிந்தர், சரவணை, நல்லதங்கம், சின்னப்பு ஆகியோரின் அன்புச் சகோதரியும், நீர்வேலி மு. சபாரத்தினத்தின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-03-94) வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. சோமசுந்தரம் (கணவன்)

155, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ் பாணம். (30038)

திருமதி

### தங்கரத்தினம் சிவசுப்ரமணியம்

(உரும்பராய்)

திருமதி தங்கரத்தினம் சிவசுப்ரமணியம் 18-3-94 அன்று கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற உரும்பராய் தம்பு சிவசுப்ரமணியம் (இளைப்பாறிய அரச மரக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்) இன் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகேஸ்வரி செல்லத்துரை (மலேசியா), சிவசோதிநாதன் (பொறியியலாளர் (கனடா), காலஞ்சென்ற பத்மநாதன் (Factory Officer Theraniagala), பத்மராணி, புஸ்பராணி இந்திராணி, சிறீரங்கநாதன் (கணனிப் பொறியியலாளர் கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்லத்துரை (Superintendent மலேசியா), நடேசன் (முகாமையாளர் உல்லாசத்துறை, கொழும்பு), நாகரத்தினம் (நில அளவையாளர் ஓமான்), பாலசுப்ரமணியம் (R M O புத்தளம்), தங்கேஸ்வரி (கனடா), சத்தியதேவி (லண்டன்), புஸ்பலதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் ரொறன்ரோ கனடாவில் அடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:

அன்னாரது மகளாகிய திருமதி மகேஸ்வரி செல்லையா அவர்கள் 16 - 03 - 1994 அன்று மலேசியாவில் காலமாகிவிட்டார் என்பதையும் அனுதாபத்துடன் அறிவிக்கின்றோம்.

தகவல்:
திரு திருமதி இ. பாலசுப்ரமணியம்

ராணி வாசம்,
உரும்பராய் (30054)

### சிமியோன் எலிசபேத்

திருமதி சிமியோன் எலிசபேத் காலமானார். இவர் காலஞ்சென்ற அந்தோனி சிமியோன் அவர்களின் அன்பு மனைவியும், சிமியோன் யேசுதாசன் (இலங்கை மின்சார சபை — சுன்னாகம்), அவர்களின் அன்புத் தாயாரும், திருமதி மொனிக்கா யேசுதாசன் அவர்களின் அன்பு மாமியாரும், மினாலி, மரியனி (ஷகிலா), தயானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற நல்லையா, அருளானந்தம், சின்னத்துரை, ஞானப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யேசுதாசன் (மின்சார சபை, கொழும்பு), திருமதி றோசலீன் ஏரோணி, அருட்செல்வி லூட்ஸ் (F. M. M. மட்டக்களப்பு), அன்ரன் ஞானப்பிரகாசம் (இலங்கை மின்சார சபை - கொலன்னாவ) ஆகியோரின் பாசமுள்ள மாமியாருமாவார். பூதவுடல் இன்று 24-3-94 பிற்பகல் 3 30 மணியளவில் பரி கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
யேசுதாசன் (மகன்)

54, பழைய பூங்கா வீதி
யாழ்ப்பாணம். (30055)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org